**இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**OS.51/2017**

**பக்கம்.6**

11.02.2020

**வா.ச.1 :திரு.முருகேசன்**

**சாட்சி இன்று முன்னிலையாகி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

தாவா சொத்து எந்த கிராமத்தில் இருக்கிறது என்றால் கொடுமுடி தாலுக்கா, சாலைபுதூர் கிராமத்தில் உள்ளது. ஆதியில் இந்த சொத்து யார் வசம் இருந்தது என்றால் பாலசுப்பிரமணியம் வசம் இருந்தது. அந்த சொத்து பாலசுப்பிரமணியத்திற்கு எப்படி வந்தது என்றால் அவருடைய அப்பாவிடம் இருந்து வந்ததாகும். பாலசுப்பிரமணியத்திற்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் அவருக்கு கிரையப்பத்திரம் மூலம் பாத்தியம் என்பதை பார்த்து தெரிந்து கொண்டேன். ஒரு ராமசாமிகவுண்டர் என்பவர் ஈரோடு சார்புநீதிமன்றத்தில் அவஎண்.157/98 என்ற வழக்கினை பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் பாலசுப்பிரமணியத்திற்கு ஒதுக்கப்பட்டன என்று என் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லியிருப்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த அவஎண்.157/98 ல் என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த அவஎண்.157/98 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நகலை நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். பாலசுப்பிரமணியத்திற்கு கிரையம் செய்வதற்கு உரிமை

உள்ளதா இல்லையா என்று தெரியாமலேயே சம்மந்தம் இல்லாத விபரங்களை என் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தின் பத்தி 3ல் சொல்லியிருக்கிறேன் என்றால் அது தவறு. இந்த விபரங்களை எல்லாம் என் வழக்குரையுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். என் அப்பா எத்தனை கிரையங்களாக தாவா சொத்து வாங்கப்பட்டது என்றும், தாவா சொத்தின் விஸ்தீரணங்கள் என்ன என்று கேட்டால் மொத்தம் 13 1/2 செண்ட் ஆகும். அதில் 10 செண்ட் ஒன்றும், அரை செண்ட் ஒன்றும், 3 செண்ட் இடம் ஆகும். அவை மொத்த 3 கிரைய பத்திரங்களின் அடிப்படையில் என் தகப்பனார் கிரையம் பெற்றார். என் தகப்பனார் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் என் தகப்பனார் நகையில் வைக்கும் கல் பாலீஷ் செய்யும் வேலை பார்த்து வந்தார். பின்னிட்டு என் தகப்பனார் கிரையம் வாங்கிய பின்னர் அந்த இடத்தை என்ன செய்தார் என்றால் என் தகப்பனார் வெளியில் கடன் வாங்கித்தான் அந்த இடத்தினை கிரையம் வாங்கி குடியிருந்து அனுபவித்து வந்தார். பாப்பம்மாளிடம் இருந்து ஜெகநாதன் ஒரு 3 1/2 செண்ட் கிரையம் வாங்கினார். என் அப்பா ஜெகநாதனிடம் இருந்து 3 1/2 செண்ட் இடத்தினை கிரையம் வாங்கினார். இந்த இடத்தை என் அப்பா ஒரு அப்பாஸ் என்பரிடம் இருந்து கடன் வாங்கி கிரையம் வாங்கினார். இந்த விபரங்களை என் வழக்குரையிலும், என் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் ஆவணங்கள் கொடுத்திருக்கிறேன். என்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்றால் கிரைய பத்திரத்திலேயே அப்பாஸ்டம் இருந்து கடன் வாங்கியதாக கண்டுள்ளது. நான்தான் மணிக்கு மூத்த மகன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனக்கு ஒரு மகன் நிரஞ்சன், ஒரு மகள் கனிஷ்கா. நான் எங்கே குடியிருந்தேன் என்றால் என் அப்பாவுடன் குடியிருந்தேன். நாங்கள்

வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்கள். எங்களை சுற்றி இருப்பவர்கள் எல்லாம் கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள். என் மனைவிக்கும், என் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் சரஸ்வதி மற்றும் நந்தினிக்கு இடையே என்ன வாய்தகராறு நடந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த வாய்தகராறின் காரணமாகத்தான் என் மனைவி சத்யா இறந்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த சங்கதிகள் அனைத்தும் நீதிமன்றத்தால் என்மேல் இரக்கம் வரவேண்டும் என்பதற்காக சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்றால் இல்லை. சாட்சி தன்னிட்சையாக தன் மனைவியின் இறப்பிற்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல்அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாக கூறுகிறார். என் மனைவி தற்கொலை செய்து கொண்டது சம்பந்தமாக பைசல் பேசப்பட்டது என்றாலும், அது யார் முன்னிலையில் எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் அது முதல் தகவல்அறிக்கை பதிவு செய்த பிறகு வெளியே பைசல் பேசப்பட்டது. அதற்கான ஆவணமும் தாக்கல் செய்திருக்கிறேன். குழந்தைகள் பேரில் ரூ.5 லட்சம் டெபாசிட் செய்ய வேண்டுமென்று என் மாமனார் சொன்னார் என்று சொல்லியிருப்பதற்கு ஆதாரமாக நான் ரூ.5 லட்சத்தை டெபாசிட் செய்து விட்டேனா என்றால் அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு பணம் டெபாசிட் செய்தால் மட்டுமே என் குழந்தைகளை பார்க்க அனுமதிப்பதாக என் மாமனார் சொல்லியதாக நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரி. அந்த 5 லட்ச ரூபாயை டெபாசிட் செய்த பின்பும், எனக்கும் என் மாமனாருக்கும் எதிர்ப்பு இருந்து கொண்டே இருந்ததா என்றால் ஆமாம். மணிவண்ணன் பெயருக்கு என் அப்பா பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதற்கு எவ்வளவு ரூபாய் என் அப்பா வாங்கினார் என்றால்

ரூ.1 லட்சம் வாங்கினார். அதை கடனாக வாங்கினாரா அல்லது கிரைய முன்பணமாக வாங்கினாரா என்றால் கடன் ஆக வாங்கினார். என் அப்பா அந்த கடனை தீர்த்து விட்டாரா என்றால் தீர்த்து விட்டார். என் அப்பா வைத்திருந்த பணத்தை வைத்து அந்த கடனை தீர்த்தாரா என்றால் ஆமாம். எந்த தேதியில் அந்த கடனை என் அப்பா தீர்த்தார் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் இயலாது ஆனால் அதற்கு ஆவணம் உள்ளது. அதன் பின் என் அப்பா மீண்டும் கடன் வாங்கினாரா என்றால் சரவணன் என்பவரிடம் இருந்து கடன் வாங்கினார். சரவணன் என்பவரிடம் இருந்து எதன் அடிப்படையில் கடன் வாங்கினார் என்றால் பத்திரத்தை வைத்துதான் எழுதி வாங்கினார். சரவணன் பெயருக்கு என் அப்பா என்ன பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் வீட்டு பத்திரத்தை வைத்து சரவணன் இடமிருந்து கடன் வாங்கினார். என் அப்பா வங்கியில் கடன் வாங்கினாரா என்றால் ஆமாம். அந்த கடனை என் தகப்பனார் திருப்பி செலுத்திவிட்டாரா என்றால் திருப்பி செலுத்திவிட்டார். என் அப்பா கனரா வங்கியில் எப்போது கடன் வாங்கினார் என்றால் சரவணனிடம் கடன் வாங்கிய பிறகு கனரா வங்கியில் கடன் வாங்கினார். சரவணனிடம் கடன் வாங்கிய விபரத்தை என் வழக்குரையிலும், முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் அந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. கனகசுந்தரம் மற்றும் லோகநாதனிடம் என் அப்பா கடன் வாங்கினாரா என்றால் ஆமாம். கனகசுந்தரம் மற்றும் லோகநாதனிடம் வாங்கிய கடன்களை என் அப்பா கட்டி தீர்த்துவிட்டாரா என்றால் கட்டிவிட்டார். கனகசுந்தரம் மற்றும் லோகநாதனிடம் வாங்கிய கடனை எப்படி என் அப்பா தீர்த்தார் என்றால் அதற்கு ஒரு செல்வகுமாரிடம் இருந்து கடன் வாங்கினார். கனகசுந்தரம் மற்றும்

லோகநாதனிடம் வாங்கிய கடனை தீர்ப்பதற்காகத்தான் என் அப்பா 1ம் பிரதிவாதி செல்வகுமாரிடம் முதன் முதலாக கடன் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். இவ்வாறு வாங்கிய கடன்கள் அதிகமாகிகொண்டே இருப்பதால் தான் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு என் அப்பா தாவா 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் தவறு. 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து ஒரு அப்பாஸ் என்பவர் பெயருக்கு என் தகப்பனார் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரி. அப்பாஸ் பெயரில் போட்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு ஒரு சுப்பராய கவுண்டர் மகன் சரவணன் பெயருக்கு ஒரு கிரைய ஒப்பந்தம் என் தகப்பனார் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரி. அது கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2013ம் வருடத்திய 524 ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பராய கவுண்டர் மகன் சரவணன் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானது என்று சொன்னால் சரிதான். சரவணன் பெயருக்கு எழுதப்பட்ட கிரைய பத்திரம் உண்மையானது தான் என்றாலும் ஆமாம். சரவணன் கிரையம் செய்ய முடியாத காரணத்தினால் 2ம் பிரதிவாதி கலைச்செல்வி என்பவருக்கு கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரவணனுக்கு உண்டான பணத்தை கொடுத்து விட்டேன். நான் என் அப்பா செய்து கொடுத்த எல்லா கிரைய ஒப்பந்தங்களும் பணம் வாங்கிக்கொண்டு 2ம் பிரதிவாதியின் பெயருக்கு ஒரு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் என் தகப்பனார் சரவணனிடம் பணத்தை திருப்பிக்கொடுத்துவிட்டார். 2ம் அயிட்ட சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்து என்றால் தவறு. கனகசுந்தரம் மற்றும் லோகநாதனிடம் வாங்கிய பணத்தை எவ்வாறு

திருப்பிக்கொடுத்தோம் என்றால் என் அப்பா 1ம் பிரதிவாதி செல்வகுமாரிடமிருந்து கடன் வாங்கி கனகசுந்தரம் மற்றும் லோகநாதனிடம் கொடுத்து கடனை அடைத்தார். அதேபோல் கலைச்செல்வியிடம் வாங்கிய கடனை செல்வகுமாரிடம் இருந்து கடனை வாங்கி என் அப்பா கலைச்செல்வியிடம் திருப்பி செலுத்தினார். செல்வகுமார் பெயருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து கடன் வாங்கினார் என்றால் சரி. அந்த தொகை கடனாக வாங்கப்பட்டது. கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து கடன் கொடுக்கப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா வாங்கிய கடன்கள் எல்லாம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் நானும் அவர் கடன் வாங்கும் போது அவருடன் சென்றேன். என் அப்பா கடன் வாங்கி எழுதி கொடுத்த ஆவணங்களில் எந்த ஆவணத்திலாவது நான் எழுதிக்கொடுத்தாகவோ, சாட்சியாகவோ கையெழுத்து போட்டிருக்கிறேனா என்றால் இல்லை. சாட்சி மீண்டும் செல்வகுமார் மற்றும் கலைச்செல்விக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணங்களில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கிறேன். என் மாமனார் ராதாகிருஷ்ணனுக்கு நான் கொடுத்த ரூ.5 லட்சத்துடன் அந்த கணக்கு தீர்ந்து விட்டது என்றால் சரி. என் மாமனாருக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் நான் ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் பாதுகாவலர் மனு 3/14 ஐ தாக்கல் செய்தேன் என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 28.8.15 அன்று தான் செல்வகுமார் பெயருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரி. கனகசுந்தரத்திடம் வாங்கிய பணத்தை வைத்துதான் என் மாமனாருக்கு ரூ.5 லட்சம் கொடுத்தேன் என்றால் கொடுத்தேன். அந்த தொகை 16.3.15 தேதியில் கனகசுந்தரத்திடம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில்

பாதுகாவலர் மனு 3/14 ஐ தாக்கல் செய்தது 2014 ம் ஆண்டில் என்றால் சரி. அதனால் நான் என் மாமனாருக்கு ஏற்பட்ட சங்கடங்கள் எல்லாம் கற்பனையாக சொல்லப்பட்டவை என்றால் இல்லை. என் சகோதரர் 25.9.2015 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் சகோதரர் பெயரும் செல்வகுமார். என் சகோதரர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் பேருந்து நடத்துனராக இருந்தார். அவருக்கு அபரிதமான வருமானம் வந்ததா என்றால் மிதமான வருமானம் வந்தது. என் இறந்து போன சகோதரர் பேருந்து நடத்துனராக வேலை பார்த்து வந்தார் என்றாலும், அவருக்கு மிதமான வருமானம் வந்தது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. முதல் அயிட்ட சொத்தில் 1 ம் பிரதிவாதி செல்வகுமார் இந்துமதி என்பவருக்கு வாடகைக்கு விட்டார் என்று சொன்னால் அது தவறு. முதல் அயிட்ட சொத்தை நான்தான் பரிபாலனம் செய்து வருவதாக சொல்லுகிறேனா என்றால் ஆமாம். என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் முதல் அயிட்ட சொத்தை போக்கியத்திற்கு இந்துமதிக்கு விடப்பட்டதா என்றால் ஆமாம். என் அப்பா இந்துமதிக்கு போக்கியத்திற்கு விட்டார். போக்கியத்திற்கு விடப்பட்ட இடத்தில் நான் இருக்கிறேனா அல்லது இந்துமதி இருக்கிறாரா என்றால் போக்கியத்திற்கு விடப்பட்ட இடத்தில் இந்துமதி இருக்கிறார். அது இரண்டு பிரிவுகளாக உள்ள வீடு. ஒன்றில் நானும், மற்றொன்றில் இந்துமதியும் இருக்கிறார். தற்போது இந்துமதி காலி செய்து விட்டு போய்விட்டார். இந்துமதி 1 ம் பிரதிவாதியால் வாடகைக்கு வைக்கப்பட்ட நபர் என்று சொல்வது தவறு. இந்துமதியை என் தகப்பனார் தான் வாடகைக்கு விட்டார். கலைச்செல்விக்கு திருப்பிக்கொடுக்க வேண்டிய பணத்தை நாங்கள் திருப்பி கொடுக்க முடியாத காரணத்தினால் செல்வகுமாரிடம் 2 ம் அயிட்ட

சொத்தை கிரையம் செய்து கொடுக்க என் அப்பா சொல்லி அந்த கிரையம் நடந்தது உண்மை. ஆனால் அது கடன் ஆகும். 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து எழுதப்பட்ட 28.8.15 அன்று கலைசெல்வி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மைதான் என்றால் உண்மைதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.39ல் உள்ள வாசகங்கள் உண்மைதான் என்றால் உண்மையானதுதான். வாசாஆ.20 ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டது அது யார் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் கலைச்செல்வி 1ம் பிரதிவாதி செல்வகுமாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது அதில் கண்டுள்ள வாசகங்கள் உண்மையா என்றால் உண்மைதான். என் அப்பா பல நபர்களிடம் கடன் வாங்கிவிட்டு வாழ்நாள் முழுவதும் 2014-2015 வரை தீர்க்க முடியாத காரணத்தினால் 1, 2 அயிட்ட சொத்துக்களை கிரையம் செய்வதற்கு தள்ளப்பட்டாரா என்றால் அவை கட்டயப்படுத்தி வாங்கப்பட்டவையாகும். என் அப்பாவை கட்டாயப்படுத்தி வாங்கப்பட்டதாக சொல்லப்படும் போது என் அப்பாவோ, நானோ காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. நாங்கள் அவர்களிடம் கடனாகத்தான் பணம் வாங்கியதால் புகார் கொடுக்கவில்லை. நாங்கள் கடனாக வாங்கியிருந்த பணத்திற்காக சொத்தை கிரையம் எழுதி வாங்கி, சொத்தை அபகரிக்கிறார்கள் என்று பிரதிவாதிகள் பெயரில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் அப்பா வாங்கிய கடனுக்காக சொத்துக்களை அவரே 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றாலும் ஆதலால் அந்த சொத்துக்கள் எங்கள் சொத்தே கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் கேட்டுள்ள விளம்புகை பரிகாரங்கள் எல்லாம் பிரதிவாதிகளை ஏமாற்றுவதற்காக போடப்பட்ட நாடகங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எவ்வளவு

ரூபாய்க்கு விலைக்கு போகும் என்று காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பிராதில் சொல்லப்பட்டிருக்கும் தாவா சொத்திற்கான கிரைய விலையானது இட்டுக்கட்டி சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை தகுந்த பணம் கொடுத்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றும், தற்போது அதை மாற்றி தவறான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவாவிற்கு சம்மந்தம் இல்லாத GWOP முதலான விபரங்களை போட்டு வழக்கேயே குழப்பும் நிலைக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் இறப்பிற்கும், என் மாமனார்க்கு கொடுக்க வேண்டிய தொகைக்கும், பக்கத்து வீட்டினருடன் ஏற்பட்ட பிரச்சனைக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லாத சங்கதிகள் என்றால் சரியல்ல. இந்துமதிக்கு எவ்வளவு ரூபாய்க்கு வாடைக்கு விட்டேன் என்ற விபரத்தை பிராதில் சொல்வில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். இந்துமதி என்னால் குடியமர்த்தப்பட்ட வாடகைதாரர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியிருக்கும் பரிகாரம் கிடைக்கதல்ல என்றாலும், தாவா தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் குவி நிறைவுற்றது.